பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 22 திங்கட்கிழமை 05.02.2024 கதிர் 90

## ‘புதிய தேசம் அமைப்போம்’ சுதந்திர தினம் காலி முகத் திடலில் நேற்று வெகு விமர்சை





76ஆவது தேசிய சுதந்திர தின விழா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் 'புதிய தேசம் அமைப்போம்' எனும் தொனிப்பொருளில் நேற்று காலை கொழும்பு காலி முகத்திடலில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். உலகில் உள்ள அனைவரின் ஆதரவோடும் மீண்டும் கட்டியெழுப்பப்படும் இலங்கையின் அடையாளத்தை உலகிற்கு எடுத்துரைப்பதே இதன் நோக்கமாகும் என்று ஆளும் தரப்பு அறிவித்தது.

ஜனாதிபதியின் வருகையைக் குறிக்கும் வகையில் இலங்கை தரைப்படையினர் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக்கட்சியின் உள்வீட்டுக் குழப்பம் இப்போதைக்கு முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் எவையும் தெரியவில்லை. பதிலாக, அது மேலும் சிக்கலான நிலையை அடைவதற்கான வாய்ப்புக்களே அதிகம் இருப்பதாகத் தெரிகின்றது.

கட்சியின் பதவி விலகிச் செல்லும் தலைவர் மாவை சேனாதிராசா தனது மகனின் திருமணத்தை முடித்துக்கொண்டு பெப்ரவரி 1-0 நாடு திரும்பியதும் மறுநாள் கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்டுவதற்குப் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிறீதரன் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றார் என்று தெரிகின்றது.

திருகோணமலையில் ஜனவரி 27 நடந்த பொதுக் குழுக் கூட்டத்தோடு பதவியிழந்த ☞2

## இந்திய மீனவர்கள் 23 பேர் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்பில் சனிக்கிழமை இரவு இந்த 23 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். அவர்களின் 2 படகுகளும் ☞8

# வடக்கு கிழக்கில் தமிழர்கள் கரிநாள் அனுஷ்டிப்பு போராட்டங்களை ஒடுக்குவதில் பொலிஸ் தீவிரம்

## கண்ணீர்ப் புகைக் குண்டு, நீர்த்தாரைத் தாக்குதல்கள் கிளிநொச்சியில் பல்கலை மாணவர் நால்வர் கைது







இலங்கையின் சுதந்திர தினமான நேற்று தமிழர்களுக்கு சுதந்திரம் இல்லாத கரிநாள் என்ற கருத்தியலில் எதிர்ப்புப்போராட்டங்கள் இடம்பெற்றன. பொலிஸார் கடுமையாக நடந்து கொண்டு இந்தப் போராட்டங் ☞2

## கைதான மாணவர்கள் நால்வரும் விடுவதலை

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கரிநாள் போராட்டத்தின்போது கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரும் நேற்றுப் பிற்பகலில் விடுவிக்கப்பட்டனர்.

இலங்கையின் 76ஆவது சுதந்திரதினத்தை தமிழர்களின் கரிநாளாக பிரகடனப்படுத்தி கிளிநொச்சியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுஇடம்பெற்றபோராட்டத்தின்போது இவர்கள் நால்வரும் பொலிஸாரால் பலவந்தமாகக் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

இப்போரட்டத்தை தடுக்கும் வகையில் 154ஆம் கட்டைப்பகுதியில் பொலிசார் வீதித் தடையை ஏற்படுத்தியிருந்தனர். விசேட அதிரடிப்படை, கலகத் தடுப்பு பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். இதனால் பொலிசாருக்கும் போரட்டக்காரர்களுமிடையில் முறுகல்நிலைஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் தண்ணீர் தாரை மற்றும் கண்ணீர் புகை குண்டு என்பவற்றின் மூலம் தாக்குதல் நடத்தினர். அப்போது 4 பல்கலைக்கழக மாணவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இதனைதொடர்ந்து கைதுெசய்யபட்ட மாணவர்களை ☞8

## “பொலிஸார் என்னை தாக்கினார்” சிறீதரன் எம்.பி. குற்றச்சாட்டு

பல்கலைகழகமாணவர்களை பொலிஸார் தாக்கியவேளை நான் அவர்களை மீட்கச் சென்றவேளை பொலிஸார்ஒருவர்என்மீதுதாக்குதல் நடத்தியிருந்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற போராட்டத்தின்போது ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பில் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸார் தாங்கள் நடந்துகொண்டவிதத்தின் மூலம் இலங்கை ஆட்சியாளர்களின் கோரமுகத்தை சர்வதேசசமூகத்திற்குகாண்பித்துக்கொண்டு வந்திருக்கின்றார்கள்

பல்கலைகழக மாணவர்கள் மீதும் பொதுமக்கள் மீதும் பொலிஸார் மிகவும் காட்டுமிராண்டித் தனமான முறையில் நடந்துகொண்டனர் பல மாணவர்கள் காவித் தூக்கிச்செல்லப்பட்டனர்

பெண் பொலிஸார் இல்லாமல் பெண்கள் இழுத்துச்செல்லப்பட்டார்கள் தூக்கி வானிலே வீசப்பட்டார்கள்.

கிளிநொச்சியை ஊர்வலம்அடைந்தபோது தண்ணீர்தாரை வாகனத்துடன் கண்ணீர்புகை ☞2

## தாய்லாந்து பிரதமருடன் நேற்று ஜனாதிபதி சிநேகபூர்வ சந்திப்பு

இலங்கைக்கு வருகை தந்துள்ள தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் உள்ளிட்ட தூதுக் குழுவினர் நேற்றிரவு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சிநேகபூர்வமாகச் சந்தித்துப் பேசினர்.

ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த தாய்லாந்து பிரதமர் உள்ளிட்ட குழுவினரை பிரதமர் தினேஷ் ☞8

## மக்களுக்கா தலைவர்களுக்கா சுதந்திரம்? பேராயர் மல்க்கம் ரஞ்சித் கடும் விமர்சனம்

இலங்கையில் பதவி, அதிகாரம், செல்வம் ஆகியவற்றைத் தேடும் தலைவர்களே இருந்தமையால் நாம் பொருளாதார ரீதியாகக் கீழ்நிலைக்குச் சென்றோம். ஆகவே இது தலைவர்களின் சுதந்திரமா அல்லது மக்களின் சுதந்திரமா என்று வினவுவதற்கு விரும்புகின்றேன்.

என்று பேராயர் கர்தினால் ரஞ்சித் மர்கம் ஆண்டகை தெரிவித்தார்.

பொரள்ளவில் நேற்று நடைபெற்ற சமய வழிபாடுகளின் பின்னர் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கப்பூரின் சுதந்திர தினத்துக்குப் பின்னர் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டவர்கள் அங்குவாழும் மலே, சீனர்கள் உள்ளிட்டவர்களை ஒரு குழுவாக ஏற்றுக்கொள்ளும் தீர்மானத்தினைத் தெரிவு செய்திருந்தார்கள்.

மாறாக எமது நாட்டில் உள்ள தலைவர்கள் எமது நாட்டில் உள்ள பல்வேறு மொழி பேசும் ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்டுவதற்கே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிகின்றது. ஆனால் அந்தச் மத்திய செயற்குழுவின் காலம் முடிந்துவிட்டது, புதிய செயற்குழுவே இனிப் பதவியில் இருக்க முடியும் என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஏற்கனவே உறுதிபடத் தெரிவித்துவிட்டார். மாவையரையும் சிறீதரனையும் ஜனவரி இறுதியில் நேரில் சந்தித்தபோதும் அதன் பின்னர் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவரான சிறீதரனுக்கு நேரடியாகக் கடிதம் எழுதியபோதும் அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

சுமந்திரனைப் பொறுத்த வரையில் மாவை சேனாதிராசா தலைமையிலான மத்திய செயற்கழுவின் பதவிக் காலம் முடிந்துவிட்டது. இனி அந்தச் செயற்குழுவைக் கூட்டமுடியாது. புதிய செயற்குழுவைத்தான் கூட்ட முடியும். புதிய செயற்குழுவோ சுமந்திரன் அணியினரைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கிறதுஎன்றுகருதப்படும் நிலையில்அதனைக்கூட்டிகட்சியின் செயலாளர் பதவியையோ அல்லது வேறு எந்தப் பதவியையுமோ மாற்ற முடியாது என்பது மாவையருக்கும் சிறீதரனுக்கும் நன்குதெரியும். எனவேஅவர்களைப் பொறுத்தவரையில் அதனைக் கூட்டுவதால் எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை.

ஆக மொத்தத்தில் பெப்ரவரி 11 கட்சியின் செயற்குழுவைக் கூட்டினாலும்கூட அதில் சுமந்திரன் தரப்பினர் பங்கேற்பார்களா என்பது கேள்விக்குறியே. பழைய செயற்குழுவிற்குச் சட்டவலுக் கிடையாது என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருக்கும்போது, அவர்கள் இன்றி நடத்தப்படக்கூடிய எந்தவொரு மத்திய செயற்குழுக் கூட்டத்திலும் எடுக்கப்படும் முடிவுகளும் நீதிமன்றில் சட்டச் சவால்களுக்குஉட்படுத்தப்படக்கூடிய ஆபத்து இருக்கின்றது.

சுமந்திரனோடு இந்த விடயத்தை நேரடியாகப் பேசிச் சமாளித்துவிடலாம்என்றுகட்சியின் நேற்றைய நாளைய தலைவர்கள் கருதக்கூடும். ஆனால், அது அவ்வளவு சுலபமான ஒன்றாகத் இருக்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைஒடுக்குவதற்குமுன்னின்றனர். போராட்டக்காரர்கள்மீதுநீர்த்தாரைத் தாக்குதல் மற்றும் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதல் என்பன நடத்தப்பட்டன. இதேவேளை வடக்கு கிழக்கில் ஆங்காங்கே சுதந்திர தினத்திற்கு ஆதரவான ஊர்வலங்களும்சிங்கக்கொடியுடன் நடத்தப்பட்டன.

கிளிநொச்சியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின்



தலைமையில் இடம்பெற்ற போராட்டத்தில் பொலிஸார் மாணவர்கள் நால்வரை கடும் பலப்பிரயோகத்தைப்பயன்படுத்திக் கைதுசெய்தனர். அவர்கள்போராட்ட இடத்திலிருந்து பொலிஸாரால் இழுத்தும், பலவந்தமாகத் தூக்கியும் செல்லப்பட்டனர். பெண்கள் தாக்கப்பட்டனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

### கிளிநொச்சி போராட்டம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இலங்கை சுதந்திரதினம், தமிழர் தேசத்தின் கரிநாள் என்ற தொனிப்பொருளில் நேற்று, கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் கவனயீர்ப்பு பேரணி ஆரம்பமானது.

"அங்கீகரி அங்கீகரி, தமிழர் தேசத்தை அங்கீகரி", "விடுதலை செய், விடுதலை செய், அரசியல் கைதிகளை விடுதலை செய்'', "ஆக்கிரமிப்பு இராணுவமே வடக்கு கிழக்கிலிருந்து வெளியேறு'', ''சிங்களவர்களுக்கு சுதந்திர நாள், தமிழர்களுக்குக் கரிநாள்", ''பதில்சொல் பதில் சொல், காணாமலாக்கப்பட்டவர்களுக்குப் பதில் சொல்'' போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தலைமையேற்று நகரவும் பேரணியில்கலந்துகொண்டபலரும் அதனைப் பின்தொடர்ந்தனர்.



இதில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம்சிறீதரன்,வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சாள்ஸ் நிர்மலநாதன், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன், வடமாகாண முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் தரப்பினரும், சிவில் அமைப்பின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் பங்கேற்றனர்.

போராட்டம் தொடங்கிய இடத்திருந்து கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலை நோக்கி சுமார் ஐந்நூறு மீற்றர் வரையில் நகர்ந்திருந்த சமயத்தில் பொலிஸார் வீதித்தடைகளை அமைத்து பேரணியைத் தடுத்தனர். அதற்கு மேல் முன்னகர்ந்து செல்ல முடியாது என்றும் கலைந்து செல்லுமாறும் ஒலிபெருக்கியில் அறிவித்தனர். எனினும், மாணவர்கள் அவ்வாறு கலைந்து செல்ல முடியாது என்று பதிலளித்து கோசங்களை எழுப்பியவாறு முன்னேற முனைந்தனர். இச்சமயத்தில்பொலிஸார்எச்சரிக்கை விடுத்ததோடு, நீர்த்தாரைப் பிரயோகத்தையும், கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

இதனால், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சாதாரண பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். தொடர்ந்து போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்களில் முக்கியமானவர்களைக் கைது செய்வதற்குப் பொலிஸார் முயன்றனர்.

இச்சமயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் உள்ளிட்டவர்கள் மாணவர்களை கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அச்சமயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் என்கிற மரியாதை இன்றி பொலிஸார் நடந்துகொண்டனர் என்று களத்திலிருந்த செய்தியாளர்கள் தெரிவித்தனர். அச்சமயத்தில் தான் பொலிஸாரால் தாக்கப்பட்டார் என்று சிறீதரன் பின்னர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் உள்ளிட்டவர்களும் மாணவர்கள் கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இச்சமயத்தில் பெண்களை, ஆண்பொலிஸார்கைதுசெய்வதற்கு முனைந்தபோது, பெண்கள் மீது கை வைக்காதே, என்றவாறு உரத்த கோசம் எழுப்பப்பட்டது. அச்சமயத்தில்நீர்த்தாரைத்தாக்குதல் மீண்டும் நடத்தப்பட்டது.

போராட்டத்தில் பங்கேற்பவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் மீண்டும் அறிவித்தனர். அதன் பின்னர் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி பேராட்டக்காரர்கள் மீது தாக்கினர். நீர்த்தாரைத் தாக்குதலும் தொடர்ந்தது.

இதற்கிடையில், அப்பகுதிக்கு அப்புலன்ஸ் வாகனமொன்று வரவும், வீதித்தடையை நீக்குமாறு மாணவர்கள் கோசமிட்டனர். பொலிஸார்வீதித்தடையைஅகற்றிய தருணத்தில்மாணவர்கள்அதனைக் கடந்து செல்வதற்கு முயற்சித்தனர். இதனால் பொலிஸார் மீண்டும் மாணவர்களைக் கைது செய்ய முயன்றனர். இதனால் சார்ச்சைகள் ஏற்பட்டன.

மீண்டும் நீர்த்தாரைத் தாக்குதலும் மற்றும் கண்ணீர் புகைக்குண்டுவீச்சும்நடத்தப்பட்டது. அத்துடன் நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பில் பொலிஸாரின் பல தடைகளை தாண்டியும் பொலிஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில்பொதுமக்கள்கறுப்புக்கொடி ஏந்தியவாறு கல்லடி செபஸ்தியன் தேவாலயத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் அவர்கள் வீதிக்கு இறங்கி பேரணி நடத்தப் பொலிஸார் அனுமதிக்கவேயில்லை.

இலங்கையின்76ஆவதுசுதந்திர தினத்தை தமிழர்களின் கரி நாள் எனவடக்கு, கிழக்குபல்கலைக்கழக மாணவர்கள் பிரகடனப்படுத்தி, கிழக்கில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரையில்கவனவீர்ப்புப்பேரணிக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

இதற்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர்உறவுகளின்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்கியிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸார் தடை விதித்ததுடன், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட17பேருக்குஎதிராகநீதிமன்ற தடை உத்தரவு பெற்றனர்.

அதேவேளை, மட்டக்களப்பு நகரில் உள்ள முக்கிய சந்திகளில் பொலிஸார் துப்பாக்கியுடன் பாதுகாப்பில் ஈடுபட்டனர். கல்லடிப்பாலப்பகுதியில்விசேடஅதிரடிப் படையினர், கொழும்பில் இருந்து சென்ற கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். நீர்த்தாரை தாக்குதல் வாகனமும் நிறுத்தப்பட்டிருந்தது.

திருகோணமலையில் இருந்தும்அம்பாறையில்இருந்தும் ஆர்ப்பாட்டத்துக்கு பேருந்துகளில் சென்றவர்களை வாகரை மற்றும் கல்லாறுபகுதிகளில்உள்ளபொலிஸ் சோதனைச்சாவடியில் பொலிஸார் இடைமறித்து அச்சுறுத்தி திருப்பி அனுப்பினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்நிலையில், நேற்றுக் காலை 10 மணிக்கு கல்லடி செபஸ்தியன் தேவாலயத்தில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்,நாடாளுமன்றஉறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர முன்னாள் முதல்வர் ரி. சரவணபவன், வேலன் சுவாமி, வடகிழக்கு முன்னேற்ற சங்க தலைவர் த.லவகுமார், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் ஒன்றுதிரண்டனர்.

அங்கு திரண்ட மக்கள் அங்கிருந்து காந்தி பூங்கா வரையில் பேரணியாகசெல்லபொலிஸார்தடை விதித்தனர். திருகோணமலைவெபர் மண்டபத்திலும்காந்தி பூங்காவிலும் சுதந்திரதினநிகழ்வுகள்நடப்பதனால் அங்கு செல்வதற்குத் நீதிமன்றத்தில் தடைஉத்தரவுபெறப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் தேவாலயத்துக்குமுன்னால்வீதியில் கறுப்புக் கொடி ஏந்தியவாறும், காணாமல்போன உறவுகளின் திருவுருவபடங்களைஏந்தியவாறும், தலையில் கறுப்புத்துண்டு கட்டியவாறும், தமிழர்களின் நிலத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும்எனக்கூறியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'சுயநிர்ணயத்துடன் வாழ வழி செய்', 'காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டும்', 'வடக்கு கிழக்கில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து', 'பெரும்பான்மை இனத்துக்கு சுதந்திர நாள் எங்களுக்கு கரிநாள்' போன்றசுலோகங்கள்ஏந்தியவாறும் கோஷங்கள் எழுப்பியும் தமிழ் மக்கள்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தால் கல்லடிப் பாலத்தில் இருந்து அரசடி வரையிலானவீதிமூடப்பட்டிருந்தது. இதனால் மட்டக்களப்புக்குள் நுழையும் மற்றும் மட்டக்களப்பில் இருந்து காத்தான்குடி நோக்கி செல்லும் வாகனங்கள் வேறு வீதிகளால் பயணித்தன.

போராட்டம் மற்றும் அதனைத் தடுக்கப் பொலிஸார் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. எனினும் ஆர்ப்பாட்டம் பகல் 12 மணி வரை இடம்பெற்றது. அதன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

### அம்பாறை

அம்பாறையிலும் கரிநாள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது இந்தப் போராட்டத்தில் சிவில் சமூக அமைப்பினர், காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள், பொதுமக்கள், தமிழ்தேசியம்சார்ந்த கட்சிகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் இணைந்து பதாகைகளை ஏந்தி, கோசமிட்டவாறுபோராட்டத்தில் ஈடுபட்டனர்.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவிலும் நேற்றுக் கரிநாள் போராட்டங்கள் இடம்பெற்றன. ஏழு முக்கிய விடயங்களை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தமிழ்தேசிய மக்கள்முன்னணியின்முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துஜனின் தலைமையில் இடம்பெற்றது.

'வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கானசர்வதேசநீதிவேண்டும்', 'தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை தேவை', 'தமிழ் அரசியல்கைதிகள்நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுதல் வேண்டும்', 'பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்படவேண்டும்', 'தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும்நிலஆக்கிரமிப்பு உடனடியாகநிறுத்தப்படவேண்டும்', 'தமிழர் தாயகத்திலுள்ள வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளை அழிக்காதே', 'இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டித்தீர்வுவேண்டும்' உள்ளிட்ட ஏழு விடயங்கள் இதன்போது வலியுறுத்தப்பட்டன.

நல்லாட்சி என்ற பெயரிலான மைத்திரி–ரணில்அரசாங்கம், தமிழ் தரப்புடன் இணைந்து தயாரித்த புதியஏக்கியராஜ்ஜிய(ஒற்றையாட்சி) அரசமைப்பு வரைபை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முற்றாக நிராகரிப்பதாகவும் போராட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, தமிழ் இன அழிப்புக்கான நீதி, நில ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்படுதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தும் பதாதைகளைத் தாங்கியிருந்தனர்.

### ஆதரவுப் பேரணிகள்

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நேற்று சுதந்திர தினத்திற்கு ஆதரவான ஊர்வலம் ஒன்றும் நடத்தப்பட்டது. கடும்போக்குவாதியும் நாடாளுமன்றஉறுப்பினருமானசரத் விஜயசேகரவின் பங்கெடுப்புடன் இந்த ஊர்வலம்நடத்தப்பட்டது. யாழ். கோட்டையில் இருந்த தொடங்கிய இந்தப் பேரணி இலங்கையின் தேசியக்கொடிகளுடன்நகர வீதிகள் வழியாக வலம் வந்தது.

வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை நகரங்களில் சுதந்திர தினத்திற்கு ஆதரவாக இலங்கையின் தேசியக் கொடிகள் பல டசின் கணக்கில் பறக்கவிடப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தேசியக் கொடிகள் எவையும் பறக்கவிடப்படவில்லை. அனைத்து மாவட்டங்களிலும் அரச அலுவலகங்களில் சுதந்திர தின நிகழ்வுகள் தேசியக் கொடி ஏற்றி இடம்பெற்றன.

## புதிய தேசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இசைவாத்தியங்களைஇசைத்தனர். பின்னர், பாதுகாப்பு படைகளின் பிரதானி, முப்படைத் தளபதிகள் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோரால் ஜனாதிபதி, விழா நடைபெறும் மைதானத்தின் கொடிக் கம்பம் அருகே அழைத்து வரப்பட்டார்.

அதனைத்தொடர்ந்துபாரம்பரிய மகுல் இசை மற்றும் சக் ஓசைக்கு மத்தியில் ஜனாதிபதியால் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. தொடர்ந்து விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஜனாதிபதி விசேட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து 105 பாடசாலை மாணவிகள் தேசிய கீதத்தை சிங்களத்தில் பாடினர். அதனை தொடர்ந்து பாடசாலை மாணவிகள் ஜெயமங்கல கீதம் மற்றும் காத்தா இசைத்தனர்.

தாய் நாட்டின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டிற்காக உயிரைத் தியாகம் செய்த அனைத்து இலங்கையர்களையும் நினைவுகூரும்வகையில்ஒருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ஜனாதிபதிக்கு மரியாதைச் செலுத்தும் முகமாக 21 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. இலங்கை இறையாண்மையுள்ள நாடு என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் 76 ஆவது சுதந்திர தின விழா அணிவகுப்பு பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை மற்றும் தேசியகெடேட்படைகளால்சிறப்பாக நடத்தப்பட்டது.

இலங்கை தேசத்தின் பலத்தையும் பெருந்தன்மையையும் வெளிப்படுத்தும் வகையில் தரைப் படை, கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை மற்றும் தேசிய கெடேட் படையைச் சேர்ந்த அதிகாரிகள் தேசியக் கொடிகளை ஏந்தியவாறு அணிவகுப்பில் பங்கேற்றனர்.

இதில் முப்படைகள் கவச வாகனங்களின்அணிவகுப்புகளும் அடங்கியிருந்தன. 22 ஓய்வுபெற்ற அதிகாரிகள் மற்றும் 29 அங்கவீனமுற்ற அதிகாரிகளும் அணிவகுப்பில்கலந்துகொண்டனர். முப்படை வாத்தியக் குழுவும் அதில் இணைந்துகொண்டது.

அணிவகுப்பு ஊர்வலம் நிறைவடையும் வரை வீசேட பீடத்தில் நின்றிருந்த ஜனாதிபதி, அங்கு பயணித்த அனைத்துப் படைவீரர்களுக்கும் மரியாதை செலுத்தினார்.

அத்துடன் இலங்கையின் வான் பலத்தைவெளிப்படுத்தும்வகையில், கிபீர் விமானங்கள் உள்ளிட்ட இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களின் வானில் சாகசங்கள் நிகழ்த்தின. பரசூட் நிகழ்ச்சிகளும் விழாவுக்கு வர்ணம் சேர்த்தன.

இதற்கிடையில்,76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பரிசுத்தப் பாப்பரசர் பிரான்சிஸ்,

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தை ரத்து செய்ய அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க சம்மேளனம் கோரிக்கை



வெளியாகியுள்ள கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்ற பட்டியலில் திருப்தி இல்லை என்றும், அந்த பட்டியலில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன எனவும், கல்முனை கல்வி வலய எதிர்கால கல்வி முன்னேற்றத்தைப் பின்னுக்குத் தள்ளும் விதமாக அந்த இடமாற்ற பட்டியல் அமைந்துள்ளதாகவும் தெரிவித்து இவ்விடயத்தை உடனடியாக கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி கல்முனை கல்வி வலய அதிபர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் பல்வேறுபட்ட ஆசிரிய தொழிற்சங்கங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளை உள்ளடக்கிய கல்முனை அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க சம்மேளனம் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரிஷிடம் கோரிக்கை விடுத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரின் கல்முனை செயலகத்தில் கல்முனை அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சம்மேளன பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது தேசிய ரீதியாகவும், மாகாண ரீதியாகவும் முன்னிலை வகிக்கும் கல்முனை கல்வி வலயத்தில் இருந்து எவ்வித மாற்று ஏற்பாடுகள் இன்றி 233 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருப்பது கல்முனையின் கல்வி வளர்ச்சிக்கு பாரிய ஆபத்தை தோற்றுவிக்கும் என்றும் 2021 ஆம் ஆண்டின் சுற்று நிருபத்தின் அடிப்படையில் கல்முனையில் ஆசிரிய வெற்றிடம் இருக்கத்தக்கதாக மேலும் 233 ஆசிரியர்களுக்கு வெளியிடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு 37 ஆசிரியர்களே வெளியிடங்களில் இருந்து கல்முனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது மாணவர்களின் கல்வியை சீரழிக்கும் செயலாகவே நோக்க முடிவதாகவும் மாணவர்களின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு இந்த விடயத்தில் உடனடியாக பொருத்தமான நடவடிக்கை எடுத்து இந்த இடமாற்ற பட்டியலை ரத்துசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும், ஏனைய மாகாணங்களில் அமுலில் இருப்பது போன்று 2016 ஆம் ஆண்டின் சுற்றுநிருபத்தை ரத்து செய்து 2021ஆம் ஆண்டின் சுற்றுநிருபத்தை அமுல்படுத்த அரசை கோருமாறும் கல்முனை அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க சம்மேளனம் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

கல்முனை கல்வி வலய புள்ளிவிவரங்கள், தகவல்களை ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், அம்பாறை மாவட்ட கல்வி மேம்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தான் முன்னின்று எடுப்பதாகவும், கல்முனை கல்வி வலயம் உட்பட ஏனைய வலயங்களின் விவரங்களையும் பெற்று மாணவர்களின் கல்வி மேம்பாட்டை கவனத்தில் கொண்டும், நாட்டின் பொருளாதார நிலை, ஆசிரியர்களின் பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டும் இந்த இடமாற்றத்தை ரத்து செய்வது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர், ஆளுநர், கல்வியமைச்சின் உயர் அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுக்க ஏற்கனவே தான் அதற்கான முன்னேற்பாடுகளை செய்துள்ளதாகவும் சம்மேளன பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தியதுடன் இது விடயமாக தான் எடுத்துள்ள அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பிலும், ஏனைய சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் இது விடயமாக பேசி எடுத்துள்ள உரிய வேலைத்திட்டம் தொடர்பிலும் விளக்கினார்.

இந்த சந்திப்பில் கல்முனை அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சம்மேளன தலைவர், செயலாளர், ஆலோசகர்கள், பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பு செயலாளர் சப்றாஸ் நிலாம், நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# தனிநபரால் ஆக்கிரமிக்கப்பட்ட முல்லை கடற்கரை பிரதேசம்

## மீனவர்களின் தொழில் பாதிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்ப்பட்ட சிலாவத்தை தியோநகர் கடற்கரைப்பகுதியில் கடற்தொழிலாளர்கள் கரையில் தொழில் செய்யமுடியாதவாறு அங்கு பாரிய நிறுவனம் ஒன்றை அமைத்துள்ள தனியார் ஒருவர் கடற்கரை பகுதி தனக்கு சொந்தமான பகுதியும் கடலுக்குள்ளும் தனக்கு என உரிமை கோரிவருவதால் மீனவர்களின் தொழில் நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று



பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள சிலாவத்தை தெற்கு பகுதியில் உள்ள தியோநகர் என்ற கடற்கரையில் 2.5 கிலோமீற்றர் தூரத்தைத் தனியார் நிறுவனம் ஒன்று கையப்படுத்தியுள்ளதால் சிலாவத்தை தெற்கு தியோநகர் மீன்பிடி சங்கத்தின் மீன்பிடி நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

1990ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட சங்கமாக சிலாவத்தை தெற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 ஆவது இறங்குதுறையாக சிலாவத்தை தெற்கு தியோநகர் இறங்குதுறை காணப்படுகின்றது.

இந்த நிலையில் தியோநகர் கடற்கரையையும் தனியார் சொந்தம் கொண்டாடி வருகின்றார்கள் இலங்கையில் கடற்தொழிலை நம்பி வாழும் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த மக்கள் கடற்கரையில் தங்கள் தொழில்களைச் செய்துவருகின்றார்கள்.

ஆனால், முல்லைத்தீவு தியோநகர் கடற்கரையில் மீனவர்கள் ஒரு சிறு கொட்டில் கூட போடமுடியாத நிலை இதற்குக் காரணம். குறித்த பகுதியில் 100 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் ஆளுகை செய்து வரும் கனாடா நாட்டினைச் சேர்ந்த தனியார் ஒருவருக்குச் சொந்தமான நிறுவனம் அங்கு இருக்கின்றார்கள். அவர்கள் தற்போது கடலுக்குள்ளும் தங்களுக்குச் சொந்தமான நிலம் காணப்படுவதாகத் தெரிவித்து கடற்கரையில் மீனவர்கள் தொழிலுக்காகச் செய்யும் எந்த நடவடிக்கையையும் செய்யவிடாமல் தடைசெய்துவருகின்றார்கள்.

இது குறிப்பாக கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகின்றது. இந்தப் பிரச்சினை பொலீஸ் நிலையம் வரை சென்று பின்னர் மாவட்ட அரச திணைக்கள அதிகாரிகள் வரை சென்று இதுவரை தீர்க்கப்படாத நிலையில் கடற்தொழிலாளர்கள் இணைந்து மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளார்கள்.

இலங்கை நாட்டில் உள்ள கடற்கரையில் இலங்கை பிரஜை தொழில்செய்யமுடியாதநிலை காணப்படுவதை சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

கடற்கரை கடலோர பாதுகாப்புபிரிவிற்குச்சொந்தமானது கடற்கரையை யாரும் சொந்தம்கொள்ளமுடியாதுஎன சொல்கின்றார்கள். ஆனால் முல்லைத்தீவில் உள்ள அதிகாரிகள்சொல்கின்றார்கள். அவர்களுக்குகடல்வரைக்கும் காணிஇருக்கென்றுசொல்லுகின்றார்கள்.

இந்த நிலையில் சனிக்கிழமை முல்லைத்தீவு கடலில் இறால் பிடி சீசன் காணப்படுவதால் வலையில் பட்ட இறால்களை வெய்யிலுக்கு மத்தியில் இருந்து தெரிந்து எடுக்கும் அவலநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளார்கள் வெய்யிலுக்காக ஒரு தறப்பாளைக்கூட கட்டமுடியாது அங்கு தடியினை நாட்டி தறப்பாளினைகட்டியபோதுஅதனையும் அகற்ற சொல்லி நிக்கின்றார்கள் குறித்த நிறுவனத்தினர்.

150 வரையான மீனவர்களைக் கொண்ட தியோநகர் மீன்பிடி சங்கத்தினர் தற்போது 20 வரையான படகுகளை வைத்து கடற்தொழில் செய்துவருகின்றார்கள் .இவர்களை நம்பி பல குடும்பங்கள் மீன் தெரிந்து தங்கள் வாழ்வாதரத்தினை கொண்டுசெல்கின்றார்கள்2.5கிலோமீற்றர் தூரம் கொண்ட கடற்கரையில் வீச்சுவலைசெய்யமுடியாது, தூண்டில் போட்டு மீன்பிடிக்கமுடியாது, ஏரல் கிண்டமுடியாது. ஒரு கொட்டில் போடமுடியாது இவ்வாறு மீனவர்களுக்கும் இந்த நிறுவுனத்திற்கும் இடையில் இந்தநிலையில் தீர்க்கப்படாத பிரச்சினையாகத் தொடர்ந்து கொண்டு செல்கின்றது.

இந்த விடயத்தில் கடற்தொழில் நீரியல்வளத்திணைக்களம் அதன் அமைச்சு மற்றும் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்கள அதிகாரிகள் உடடியாகத் தலையிட்டு மீனவர்களின் தொழில் வாழ்வாதார பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கவேண்டும் என மீண்டும் கடற்தொழிலார்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.(05)

# குப்பை மேட்டுக்கு வரும் யானையால் அருகில் குடியிருக்கும் மக்கள் அச்சம்!

கிண்ணியா நகரசபைக்குட்பட்ட பாரதிபுரம் சின்னத் தோட்டம் பகுதியில் கிண்ணியா நகர சபையால் சேகரிக்கப்படும் குப்பைகளை சின்னத் தோட்ட பகுதியில் கொட்டுவதால். கழிவுகளை உண்ண வருகின்ற யானை அருகில் குடியிருப்பவர்களின் குடியிருப்புகளுக்கு வந்து தம்மையும் தமது தோட்ட பயிர்களையும் அழித்து விடும் என அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது இப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த யானை பாதுகாப்பு மின்சார வேலி கடந்த சில வருடங்களாக இயங்காததால் குப்பை மேட்டுக்கு வருகின்ற யானை வீடுகளுக்கு வந்திடும் என அச்சம் தவிக்கின்றனர்.

ஏற்கனவே இந்த யானை வீடுகளையும் விட்டுத் தோட்ட பயிர்களையும் அழித்துள்ளன எனவும் கூறுகின்றனர்.

இப்பொழுது மின்சார வேலை இல்லாதபடியால் மீண்டும் தமது குடியிருப்புகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கின்றனர்.

தென்னைவாழைமரவெள்ளிமுதலானபயிர்களை அளித்து விடும் என அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதனால்மின்சாரவேடியை அமைத்துத்தருமாறு அம்மக்கள் தெரிவிப்பதோடு தமக்கு பாதுகாப்புத் தர வேண்டும் எனவும் கூறுகின்றனர்.(05)

# கற்பிட்டி பிரதேச அபிவிருத்திக்கு 400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு



(எச்.எம். சியாஜ்)

கற்பிட்டி பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் கற்பிட்டி பிரதேச செயலகத்தில் புத்தளம்மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் அலி சப்ரி றஹீம் தலைமையில் இணைத் தலைவர் சிந்தக மாயாதுன்னவின் பங்குபற் றுதலுடன் இடம்பெற்றது.

2024 ஆம் வருடத்திற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பன்முகப்படுத்தப்பட்ட நிதி, மாகாண சபை மற்றும் அமைச்சரவையால் கிடைக்கப்பெற்றுள்ள நிதிகள் உள்ளடங்களாக இந்த வருடம் 400 கோடி ரூபா கற்பிட்டி பிரதேச அபிவிருத்திக்காக செலவிடப்பட உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் கூட்டத்தில் தெரிவித்தார்.

(05)

# மோ. சைக்கிள் ரேஸ் ஓடிய இளைஞர்களால் விபத்து

## இருவர் காயம்

(எஸ்.அஷ்ரப்கான்)

நான்கு இளைஞர்களுக்கு மத்தியில் இடம் பெற்ற ரேஸ் ஓட்டம் விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிந்தவூர் வைத்தியசாலை வீதியிலிருந்து பிரதான வீதியை நோக்கி சனிக்கிழமை காலை 7 மணியளவில் நான்கு இளைஞர்கள் இரு மோட்டார் சைக்கிளில் வேகமாக சென்ற நிலையில், வேகக்கட்டுப்பாட்டை இழந்து , ஜும்ஆ பள்ளிவாசல் முன்வாயல் சுவர் பகுதியில் மோதுண்டு, இரு இளைஞர்கள் பலத்த காயங்களுடன் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விளைஞர்கள் நிந்தவூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அறியக் கிடைத்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## போராட்டங்களைக் கண்டு அச்சம்

'அரகலய' போராட்டங்களுக்குப் பின்னர் மக்கள் போராட்டங்களைக் கண்டு ஆட்சியாளர்கள் கடும் அச்சமடைந்துள்ளனர்என்பதுகண்கூடாகத்தெரிகின்றது. எந்தவொரு போராட்டமும் ஆட்சிக் கவிழ்ப்பில் போய் முடிந்துவிடுமோ என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அதனாலேயே போராட்டங்களை காவல்துறையினரைக் கொண்டு முளையிலேயே கிள்ளி விடுவதில் தீவிரமாக இருக்கின்றனர்.

வடக்கு கிழக்கில் நேற்று முன்னெடுக்கப்பட்ட, இலங்கையின் சுதந்திர தினத்திற்கு எதிரான கரிநாள் போராட்டங்கள் மீது காவல்துறையினர் அவசியமற்று பலப் பிரயோகம் மேற்கொண்டதைப் பார்க்கும்போது, ஆட்சியாளர்களின் அச்சம் வெளிப்பட்டது. இது தற்போதையஆட்சிபற்றியஆட்சியாளர்களின்உள்ளார்ந்த மதிப்பீட்டின் வெளிப்பாடாகவும் இருக்கின்றது.

அரகலய போன்ற மக்கள் கிளர்ச்சி ஒன்று மீண்டும் ஏற்படுவதற்கான உடனடிச் சாத்தியங்கள் எவையும் இல்லை என்பது ஆட்சியாளர்களுக்குத் தெளிவாகத் தெரிகின்றபோதும்போராட்டங்களைஅனுமதிப்பதில்லை என்கிற அவர்களின் முடிவு, தமது ஆட்சியின் செல்நெறி பற்றிய ஆழமான கேள்வியை அல்லது சந்தேகங்களை ஆட்சியாளர்கள் கொண்டுள்ளனர் என்பதையே அர்த்தப்படுத்துகின்றது.

கடந்த வாரம் ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் முன்னெடுத்த போராட்டம் மீதும் காவல்துறையினர் இவ்வாறுதான் நடந்துகொண்டனர். பேரணி தொடங்கிய 15ஆவது நிமிடத்தில் அதனைக் கலைத்தனர். அவசியமற்றவிதத்தில்கண்ணீர்ப்புகைக்குண்டுகளையும் நீர்த்தாரையையும் பயன்படுத்தி போராட்டக்காரர்களைக் கலைத்தனர். அதற்கு முன்னதாக கொழும்பு நகரின் சில பகுதிகளுக்குள் போராட்டக்காரர்கள் நுழைய நீதிமன்றத் தடை உத்தரவுகளையும் காவல்துறையினர் பெற்றிருந்தனர். அதனைக் காரணம் காட்டியே பேரணியைக் கலைத்தனர்.

அது கொழும்பில், தலைநகரில் நடந்த போராட்டம். அரகலயவின் போது அரச அலுவலகங்கள் சேதமாக்கப்பட்டன, வன்முறைகள் வெடித்தன என்கிற காரணங்களால் கொழும்பு போராட்டங்கள் குறித்து ஆட்சியாளர்கள் கூடுதல் எச்சரிக்கையோடு நடந்துகொள்கிறார்கள் என்று ஒரு வாதத்துக்காவது எடுத்துக்கொள்ளலாம். ஆனால் கொழும்பில் இருந்து தொலை தூரத்தில் இருக்கும் வடக்கு கிழக்கில் அமைதியான வகையில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் போராட்டங்களையும் ஆட்சியாளர்கள் அடக்கி ஒடுக்குவதற்கான தேவை என்ன வந்தது.

இலங்கையின்சுதந்திரதினத்தைக்கொண்டாடுவதற்கு மக்களுக்க உள்ள உரிமையளவிற்கு அதனை எதிர்ப்பதற்கும் அது தொடர்பான தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் மக்களுக்குச் சம உரிமை உள்ளது என்பதை இலங்கையின் அரசமைப்பு உறுதிப்படுத்துகின்றது. அது மட்டுமல்லாது சர்வதேசச் சட்டங்களும் உறுதிப்படுத்துகின்றன. அப்படியிருந்தும் வடக்கு கிழக்கில் போராட்டங்களை நடத்துவதை காவல்துறையினர் அனுமதிக்கிறார்கள் இல்லை. அவசியமற்ற பலப் பிரயோகத்தைப் பயன்படுத்தி அவற்றைக் கலைக்கிறார்கள்.

இத்தகைய தேவையற்ற அரச வன்முறையும் அரச பயங்கரவாதமுமே கடந்த காலங்களிலும் தமிழ் இளையோர் மத்தியில் வன்முறை சார் சிந்தனைகளை விதைத்தது. வளர்த்தது. ஆட்சியாளர்கள் மீண்டும் மீண்டும் அதே பாதையில் பயணிப்பது, இந்த வருட சுதந்திர தினத்தின் கருத்தியலான புதிய தேசத்தைப் படைக்க ஒருபோதும் உதவாது.

ஆட்சியாளர்கள் விரைவில் தமது போக்கை மாற்றிக்கொண்டு மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த முன்வரவேண்டும். இல்லையேல் அதற்கான பயனை அடுத்து வரும் தேர்தல்களில் அனுபவிப்பதைத் தவிர்க்க முடியாது.




# சர்வதேச நீதிமன்றம் திறனற்றதா?

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

பாலஸ்தீனத்தில் இஸ்ரேலால் தொடரும் இனப்படுகொலைகளுக்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும் எனவே அதனைத் தான் விசாரிக்க முடியும் என்றும் போர்க் குற்ற சர்வதேச நீதிமன்றம் திட்டவட்டமாகஅறிவித்துள்ளது. ஆயினும்இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும் எனவும், போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் தென்ஆப்பிரிக்கா விடுத்த கோரிக்கை குறித்து சர்வதேச நீதிமன்ற நீதிபதிகள் பதில் எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில், இனப்படுகொலை குற்றச்சாட்டு தவறானது என தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தங்களது தரப்பு நியாயத்தை ஏற்க நீதிமன்றம் மறுத்துள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

### சர்வதேச நீதிமன்றம்:

சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) என்பது, ஐ.நா. சபையின் நீதித்துறை சார்ந்த முதன்மை அமைப்பு ஆகும். இது நெதர்லாந்து நாட்டின்தலைநகரானஹேக்கில்தலைமையகத்தைக் கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அவையின்படி 1945ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்நீதிமன்றம் 1946 ஆம் ஆண்டில் இயங்கத் தொடங்கியது.



இது முன்னர் இயங்கிவந்த நிரந்தர சர்வதேச நீதிமன்றம் (Permanent Court of International Justice) என்பதற்கான பதிலீடாகச் செயல்பட்டது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்பதும் அனைத்துலக அளவிலானநீதிவழங்குதலுடன்தொடர்புடையதாகும்.

இதன் உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்படும் சட்டத்தகராறுகளைத் தீர்த்து வைப்பதும், முறையான அதிகாரம்பெற்ற அனைத்துலக அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஆகியவை முன்வைக்கும் சட்டம் தொடர்பான கேள்விகள் குறித்து ஆலோசனை வழங்குவதும் இந்த நீதிமன்றத்தின் முக்கிய பணிகளாகும்.

இதன்வரலாற்றில்மிகக்குறைந்தவழக்குகளையே கையாண்டுள்ளது எனினும், 1980களுக்குப் பின்னர் இந்நீதிமன்றத்தைப் பயன்படுத்திக் கொள்வதில், வளர்ந்துவரும் நாடுகள் மத்தியில் ஆர்வம் காணப்படுகின்றது.

### 'இனப்படுகொலை' (Genocide)

'இனப்படுகொலை' (Genocide) என்பது




முறைப்படுத்தப்பட்ட மற்றும் விரிவான முறையில் இனவரையறை, நிறபேதமை, மதம் மற்றும் தேசியம் என்ற ஏதாவதொரு வகையில் ஒரு இனத்தை பாகுபடுத்தி, அந்த இனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பது ஆகும்.

இனப்படுகொலைக்கு எதிராக ஐக்கிய நாட்டு அமைப்பின் புதிய சட்டம் 1951 ஆம் ஆண்டு அமலுக்கு வந்தபின், அதன் அப்போதைய 80 உறுப்பு நாடுகளும் அந்த சட்டத்தின் சரத்துக்களை தங்கள் நாட்டு சொந்த சட்டத்தில் இணைத்தன. இந்த செயலானது, குற்றவாளிகளை பரந்த அளவில் அடையாளம் காண்பதற்கு உதவி புரிந்தது எனலாம்.

உலகம் முழுவதும் பல நாடுகளிலும் கடந்த 250 ஆண்டுகளில் இனப்படுகொலைகள் என்ற பெயரில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை லட்சமோ, கோடியோ அல்ல; பல மில்லியன்களைத் தாண்டுகிறது என்பதுதான் உண்மை.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொன்று, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் இனப் படுகொலை அமையலாம். ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுப்பதும் இனப்படுகொலையாகவே பார்க்கப்படுகிறது.

### சர்வதேச நீதிமன்றமும் இனப்படுகொலையும்

இனப்படுகொலை சர்வதேச சட்டங்களின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றமாகும். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு, இனப்படுகொலை என்பது கட்டாயத் தேவையின்படி, ஒரு மாபெரும்




சர்வதேச குற்றமாக கருதப்பட்டாலும், அதை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாடுகளோ அல்லது வலிமை வாய்ந்த நாடுகளோ ஒத்துழைக்காமல்



சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

ஈரானில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பஹாய் (Bahai) என்ற சமயத்தின் நம்பிக்கையாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேரை அந்நாட்டு ஷியா இஸ்லாமிய ஆட்சியாளர்கள் கொன்று குவித்தனர். அவர்களின்

(5ஆம் பக்கம் பார்க்க..)

# சர்வதேச நீதிமன்றம் திறனற்றதா?

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சொத்துக்களையும், உரிமைகளையும் பறித்தனர். பலரை நாட்டை விட்டு விரட்டினர். இன்றுவரை அந்நாட்டில் பஹாய்களுக்கு கொடுமைகள் நடந்தவண்ணமே உள்ளன.

தொடரும் துயரமாக முதலாம் உலகப்போர் சமயத்தில், ஆர்மீனியா நிலத்தில் துருக்கியர்களால் லட்சக்கணக்கில் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். ஈராக் மற்றும் துருக்கி பிராந்தியத்தின் ஆயிரக்கணக்கான குர்துக்கள் கொல்லப்பட்டனர்.

பின்னர் இரண்டாம் உலகப் போரின் போது, பல லட்சம் யூதர்களை ஹிட்லரின் நாஸிச அரசு படுகொலை செய்தது.

### ஹிட்லரும் பொல்பொட்டும்:

ஹிட்லரால் ஜெர்மனியில் யூதர்கள் கொடூரமாகத் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். யூதர்கள் நெருக்கமான பகுதிகளில் அடைத்துவைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து சரக்குத் தொடர் வண்டிகள் மூலம் நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த வதை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத்துக்



கொல்லப்பட்டனர்.

1953-ம் ஆண்டு கம்போடியா பிரான்ஸிடமிருந்து விடுதலை அடைந்த பின், சிஹானக் கம்போடியா அரசனாகப் பொறுப்பேற்றார். கம்போடியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (கிமேர் ரூஜ் ) தலைவர் ஆன பொல் பொட் சிஹானக்கை பதவியிறக்கி, 1976இ-ல் பிரதமராகப் பதவியேற்றார். வணிகம், மருத்துவம், தொழில்துறை எனப் பல துறைகள் எல்லாம் நிறுத்தப்பட்டன.

ஆட்சியாளர்களை எதிர்த்து போராடிய மக்களைச் சிறையிலடைத்து சித்ரவதை செய்தும் பசி, பட்டினி போன்ற சட்டவிரோதமான முறைகளிலும் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன. குருட்டுத்தனமான கொள்கையும், செயல்முறைப்படுத்தாத திறனும் மக்களை வாட்டின. சுமார் 20 லட்சம் மக்கள் இம்முறையில் கொல்லப்பட்டனர்.

### திமோரும் ருவாண்டாவும்:

1975இ-ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பையும் இனப்படுகொலையாகவே முன்வைக்கின்றனர். அமெரிக்க செவ்வியந்தியர்கள், பாலஸ்தீனியர்கள், கொங்கோ, சோமாலியா, கொசாவா என உலக நாடுகளின் வரலாற்றில் 'இனப்படுகொலைகள்' தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன என்பது நிதர்சனம்.

ஜெர்மனியின் காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகள் ருவாண்டா, புருண்டி. இங்கு டூட்சி, ஹூட்டு என்ற இரண்டு இனகுழுக்கள் வாழ்ந்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக டூட்சி இன மக்கள் ஆண்டுவர, பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பிறகு,1972இ-ல் புருண்டியில் ஹூட்டுகளின் புரட்சி தொடங்கியது.

1994 ஏப்ரல் 7 அன்று ஹூட்டு இன மக்கள், டூட்சி இனத்தவரை கொல்லத் திட்டமிட்டனர். பெரியவர், சிறியவர் எனப் பாரபட்சம் இல்லாமல் அனைவரையும் கொன்று குவித்தனர் ஹூட்டு இனத்தினர். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்தனர். அத்துடன் ஆயிரக்கணக்கானோர் முடமாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஈழத்தில் தமிழர் படுகொலை :

ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலை பெரும் வலியையும், ஆற்றாமையையும் ஏற்படுத்தியது. இப்போதும் எங்கள் ஈழமண் துயரங்களுடன் அந்த நினைவுகளைத் தேக்கி வைத்திருக்கிறது. விடியலுக்கான நீண்ட பயணம் தொடர்கிறது. 1983-ஆம் ஆண்டு 'கறுப்பு ஜூலை' சம்பவம் இன்றளவும் நீங்காவடுவாக தமிழர்கள் மத்தியில் நிலவுகிறது. கண்ணில்பட்ட எல்லாரையும் கொன்று, பெண்கள் பலரும் பாலியல் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், படுகொலையும் செய்யப்பட்டனர்.

1958, 1977, 1983ஆம் ஆண்டுகளில் நடந்த



இனக்கலவரங்களும் குறிப்பிடத்தக்கவை. ஈழப் போராட்டம் தொடங்கிய பின்பு வானூர்திகளிலிருந்து கண்மூடித்தனமாக குண்டுவீசுதல், ஏவுகணை வீச்சு, நேரடித் தாக்குதல் போன்றவற்றின் மூலம் இதுவரை சுமார் லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர் அகதிகளாயினர்.

வரலாற்றில் மனித இனம் தோன்றியதிலிருந்து ஓர் இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில்



ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது. மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வரலாற்றின் துயரமாக பார்க்கலாம்.

இன்னமும் தொடரும் துயரமாக, அரசியல் மற்றும் பொருளாதார தேவைகள் மட்டுமே மனிதர்கள் அழியக் காரணமாவதில்லை. பல சமயங்களில் அதைவிட சித்தாந்தம், கொள்கை, இனப்பெருமை போன்ற விஷயங்கள் பெரும்பாலான மனித அழிவிற்கு காரணமாகின்றன.



காலைக்கதிர் Kalaikkathir



# ஒரு பாடத்துக்கு நான்கு ரியூஷன்கள் தேவையில்லை சுயகற்றலே அவசியம்; பேராசிரியர் மதிவேந்தன்.




( காரைதீவு சகா)

ஒருபாடத்திற்குநான்குஇடங்களில்டியூஷன் செல்வதால் எந்த பிரயோசனமும் இல்லை. சுயகற்றல் ஒன்றே முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் .

இவ்வாறு காரைதீவில் இடம் பெற்ற கல்விச் சாதனையாளர் பாராட்டு விழாவில் உரையாற்றிய கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பபீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தவநாயகம் மதிவேந் தன் தெரிவித்தார்.

காரைதீவு ரக்ஸ் மற்றும் அஸ்கோ அமைப்பின்வருடாந்தகல்விச்சாதனையாளர் கௌரவிப்பு விழா சனிக்கிழமை காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கஅமைப்பின் செயலாளர் ச.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பபீட பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

காரைதீவு அஸ்கோ மற்றும் ரக்ஸ் அமைப்பின் ஸ்தாபகர் கனடாவில் வதியும் வைத்திய கலாநிதி டாக்டர் அருளானந்தம் வரதராஜாவின் ஏற்பாட்டில் ஏனைய புலம்பெயர் அனுசரணையாளர்களின் பங்களிப்புடன் இப்பாராட்டு பல வருடங்களாக நடைபெற்று வருகிறது.

விழாவில் நட்சத்திர அதிதிகளாக கிழக்கு மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எஸ். புவனேந்திரன், காரைதீவு பிரதேசசெயலாளர்சிவஜெகராஜன், பொதுச் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் நடேசன் அகிலன், பிரதம பொறியியலாளர்ப.இராஜமோகன், உதவிக்கல்விப்பணிப்பாளர்வி.ரி. சகாதேவராஜா, பொறியியலாளர் என்.பிரேமகாந்தன் , வைத்திய அதிகாரி டாக்டர் எல்.லேணுசா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

விஞ்சைமிகு அதிதிகளாக காரைதீவு இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி யாழினி மோகனகாந்த், அதிபர் எஸ்.மணிமாறன் ஆகியோரும், வித்திய அதிதிகளாக ஆசிரியர்களான ரி.தெய்வீகன், எஸ்.தேவகுமார்,கே.ருத்ரகுமார்,ஈ.சங்கீத், திருமதி ஜே.சந்திரசேகரம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உயர்தரம் கற்கும் காலத்தில் நாள் ஒன்றுக்கு நான்கு மணித்தியாலங்கள் கட்டாயம் சுயகற்றலில் ஈடுபடவேண்டும்.

சுயகற்றல் ஒன்றே வெற்றியைத் தரும். குறிப்பாக ஆசிரியர் கைந்நூலை படியுங்கள்.

அதிலுள்ள விடைகளைத்தவிர வேறொன்றுமில்லை.

காரைதீவில் இம் முறை 37 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றார்கள். இங்கு பாராட்டு விழா சிறப்பாக நடைபெறுகிது .

அடுத்தமுறைஇந்தஎண்ணிக்கைஐம்பதாக வேண்டும்.

முடியுமானவரைமொபைல்தொலைபேசிப் பாவனையை குறையுங்கள். அப்பொழுது முன்னேறலாம் என்றார்.




இங்கு மூன்று ஏ பெற்ற ஐந்து மாணவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பரிசும் அடுத்த கட்ட பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு தலா 50ஆயிரம் ரூபாவும் ஏனையோருக்குபதக்கமும்வழங்கிகௌரவிப்பு இடம் பெற்றது.

புலம்பெயர் அனுசரணையாளர்களான டாக்டர் அ.வரதராசா(கனடா), மு.யோகராசா( கனடா), டாக்டர் த.கௌரிகாந்தன்(அவுஸ்திரேலியா), சி.கருணாநிதி( லண்டன்), பொறியியலாளர் வீ.சத்தியமூர்த்தி(ஆஸ்திரேலியா), பொறியியலாளர் எஸ்.பிரேமகாந்தன்( லண்டன்), ச.ஹரிகரராஜா( லண்டன்) ஆகியோர் விழாவில் பாராட்டப்பட்டனர்.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் தவநாயகம் மதிவேந்தன் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு பிறந்த மண்ணில் பாராட்டப்பட்டார்.

விழாவை கல்வியியலாளர் வி.ரி.சகாதேவராஜா நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

அஸ்கோ அமைப்பின் அதிபர் எம்.சுந்தரராஜனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றநிகழ்வில், பொருளாளர் பி.கேதீஸ் ஆசிரியர் நன்றியுரையாற்றினார்.

சாதனை மாணவர்களின் பெற்றோரும் கலந்து சிறப்பித்தனர்.

(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,

ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,

ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-

பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## புதிய தேசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானிய மூன்றாவது சார்ள்ஸ் மன்னர், ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், தென் கொரியா ஜனாதிபதி யுன் சுக் சுக் யெஓல், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, லிபிய ஜனாதிபதி கலாநிதி மொஹமட் ஒய் அல் மென்பி, சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்னம், ஆஸ்திரேலிய ஆளுநர் ஜெனரல் டேவிட் ஹர்லி ஆகியோரும் பாகிஸ்தான் ஜனாதிபதி, பங்களாதேஷ் ஜனாதிபதி, குவைத் அமீர் உள்ளிட்ட அரசதலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் அரசுக்கும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மகாசங்கத்தினர் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள், ரணிலின் பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், ஆளுநர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தாய்லாந்து பிரதிப் பிரதமர் மற்றும் வர்த்தக அமைச்சர் பூம்தம் வெச்சசாய் உள்ளிட்ட தாய்லாந்து தூதுக்குழுவினர், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர், அமைச்சரவை செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், முப்படைகளின் பிரதானிகள் மற்றும் முப்படை தளபதிகள், பதில் பொலிஸ் மா அதிபர், சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பாதுகாப்பு படைகளின் பிரதானிகள், அரச அதிகாரிகள் மற்றும் படையினர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## மக்களுக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களையும் மதங்களையும் பிரித்து அவர்களுக்கு இடையில் இல்லாத பிரச்சினைகளை உருவாக்கி, அவர்களுக்கு இடையில் சமத்துவத்தினை இல்லாதொழித்து முதலில் சிங்களம் இரண்டாவதே தமிழ் என்று செயற்பட்டனர்.

ஒவ்வொரு தேர்தல்களிலும் பெரும்பான்மை மக்களை மகிழ்விக்கவும், அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளவும் அவர்கள் அதனைச் செய்தனர். சிங்கப்பூர் தலைவர்கள் மாறுபட்ட செயற்பாடுகளையே முன்னெடுத்தனர். அவர்கள் அனைத்து மக்களையும் சமமாக மதித்ததுடன், பொலிஸார், நீதிமன்றம் உள்ளிட்டவற்றுக்கு மீஉயர் அதிகாரங்களை வழங்கிய மக்களின் பாதுகாப்பையும் ஐக்கியத்தையும் உறுதிப்படுத்தினார்கள்.

அவர்கள் அதற்கான சட்டங்களை உருவாக்கி அவற்றை முன்னெடுத்தார்கள், அவற்றுக்கு முன்னுரிமையும் அளித்து வருகின்றார்கள். இலங்கையின் தலைவர்கள் படிப்படியாக சட்டங்களை இயற்றி தமது அதிகாரங்களை தக்க வைத்துக்கொள்வதற்கே முயற்சிக்கின்றார்கள். அதற்கான செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றார்கள்.

சிங்கப்பூர் அமைச்சர்கள் தவறுகளை இழைத்தால் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கும் கலாசாரம் காணப்படுகின்றது. ஆனால் இலங்கையில் அமைச்சர்கள் தவறுகளை இழைத்தால் தலைவர்கள் அவர்களை எவ்வாறு பாதுகாத்து வைத்துக்கொள்வது என்றே செயற்படுகின்றார்கள். இந்த நாட்டில் அதிகாரம் படைத்தவர்களுக்கு ஒரு சட்டமும் அதிகாரமற்றவர்களுக்கு மற்றொரு சட்டமும் கடைப்பிடிக்கப்படுவதானது இந்த நாட்டின் வளர்ச்சிக்குப் பெருந்தடையாக அமைந்துள்ளது.

சிங்கப்பூரை ஆட்சி செய்த தலைவர்கள் நேர்மையாகவும், புத்திசாலித்தனமாகவும், சுய உணர்வுடனும் உழைத்தமையால் சிங்கப்பூர் தற்போது சிறந்த நாடாகத் திகழ்கின்றது.

எமது நாட்டில் பதவி, அதிகாரம், செல்வம் ஆகியவற்றைத் தேடும் தலைவர்களே இருந்தமையால் நாம் பொருளாதார ரீதியாக கீழ் நிலைக்குச் சென்றோம். ஆகவே இது தலைவர்களின் சுதந்திரமா அல்லது மக்களின் சுதந்திரமா என்று வினவுவதற்கு விரும்புகின்றேன்.

வெளிநாட்டு தூதுவர்கள், முப்படையினர், போர்க்கருவிகளைக் கொண்டுவந்து பசியோடு இருக்கும் மக்களை கேலி செய்வதா சுதந்திரம் என்று கேட்கின்றேன். எமது தாய் நாடு துரதிஷ்டவசமாக. இந்த அடக்குமுறை ஆட்சியின் பிடியிலிருந்து விடுபடுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபோது, அர்ப்பணிப்பும், புதிய சிந்தனையும் உடைய ஊழல்மோசடிகள் அற்ற புதிய தலைமைத்துவத்திடம் நாட்டை ஒப்படைக்க முடியும் என்று நான் நம்புகின்றேன் -என்றார்.

## கைதான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி போராட்டக்காரர்கள் நான்கு மணிநேரமாக பொலிஸ் நிலையம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கப்பாடுகளையடுத்து

பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட நான்கு மாணவர்களும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைகளுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். அவர்களை விடுவிக்கக் கோரிய போராட்டமும் முடிவுக்கு வந்தது.

## இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான இந்திய மீனவர்கள் மயிலிட்டி துறைமுகத்துக்கு நேற்றுக் காலை அழைத்து வரப்பட்டு, கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்திய மீனவர்களை ஊர்காவற்துறை நீதிமன்றில் அதிகாரிகள் முற்படுத்தினர். அவர்களை நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

## தாய்லாந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்தன வரவேற்றார். பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அவர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதன் பின்னர் இரு தரப்பினரும் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டனர்.

இதனிடையே, ஜனாதிபதி மாளிகையில் உள்ள புராதன ஓவியங்களையும் பார்வையிட்ட தாய்லாந்து பிரதமர், அங்கு வைக்கப்பட்டிருந்த சிறப்பு விருந்தினர் புத்தகத்தில் நினைவுக் குறிப்பையும் இட்டார்.

தாய்லாந்து பிரதி பிரதமரும் வர்த்தக அமைச்சருமான பூம்தாம் வெச்சயாசாய் மற்றும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் ரமேஷ் பத்திரன, நிமல் சிறிபால டி சில்வா, காஞ்சன விஜேசேகர, ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன உள்ளிட்ட குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகளை வீசிய பொலிஸார் மிகவும் மிலேச்சத்தனமாக அடாவடியாக நடந்துகொண்டார்கள்.

மிகவும் ஜனநாயக அடிப்படையில் தனக்கிருக்கின்ற மனித உரிமைகளின் அடிப்படையில் போராட்டத்தை முன்னெடுத்த பல்கலைகழக மாணவர்கள் பொதுமக்கள் மீது மிகவும் மோசமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் பொலிஸார் நடந்துகொண்டமை வரலாற்றில் மீண்டும் ஒருமுறை இலங்கையில் பொலிஸாரின் அடாவடித்தனத்தை அடையாளப் படுத்தியுள்ளது.

பல மாணவர்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள் இது வெல்லாம் நடைபெற்ற பின்னர் ஐந்து மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்களை விடுவிக்கவேண்டும் என்று கோரி மக்கள் பொலிஸ் நிலையம் முன்பாக பிற்பகல் 3-.30 மணிவரை காத்திருந்தார்கள். அவர்களை விடுதலை செய்யும்வரை செல்லமாட்டோம் எனக் காத்திருந்தார்கள்.

நண்பர் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ல்ஸ் நிர்மலநாதனும் பல்கலைகழக மாணவர்களும் பொலிஸ் நிலையம் சென்று அவர்களை விடுவித்துக்கொண்ட வந்தபின்னர்தான் இந்தப் போராட்டம் முடிவிற்கு வந்திருக்கின்றது - என்றார்.

பல்கலைகழக மாணவர்களை பொலிஸார் தாக்கியவேளை நான் அவர்களை மீட்கச்சென்றவேளை பொலிஸார் ஒருவர் என்மீது தாக்குதல் நடத்தியிருந்தார் அதற்குரிய வீடியோ ஆதாரங்கள் உள்ளன நான் அதனை உரிய நேரத்தில் வெளியிடுவேன் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# நிம்மதி,, ஒற்றுமை, பொருளாதார மேம்பாடு அனைத்தும் கிடைக்கும் நாள் அன்றே உண்மையான முழு சுதந்திரம்

## கிழக்கின் கேடய முன்னாள் தலைவர் எஸ்.எம். சபீஸ் கருத்து






வெளிநாட்டவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து சுதந்திரமாக பேச, எழுத, சுயமாக தொழில் செய்ய, அடிமையாக இல்லாமல் வாழத் தேவையான சுதந்திரத்தை இந்த சுதந்திரம் நமக்கு பெற்றுத்தந்துள்ளது. இந்த சுதந்திரத்தைப் பெற நமது மூத்தோர்கள் கடுமையாக போராடி உள்ளார்கள். அந்த சுதந்திரத்தை வைத்து நாம் நிம்மதியாக வாழ்கின்றோமா என்றால் இல்லை. நிம்மதியும் சேர்ந்து வந்தால் தான் அது பூரண சுதந்திரம். எமக்கு தாய் எவ்வளவு முக்கியமோ அதை போன்றே தாய் நாடும் முக்கியம். எமது சந்ததிகளுக்கு எமது தாய் நாட்டின் மீதான பற்றை சிறு வயது முதலே நாம் ஊட்ட வேண்டும். தேச பக்தியும், தேச உணர்வும் அவர்களுக்கிடையே வருகின்ற போது தான் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற உணர்வு வரும். நாட்டை முன்னேற்ற நினைக்கின்றவர்களால் தான் தனது சமூகத்தையும், ஊரையும் முன்னேற்ற முடியும் என கிழக்கின் கேடயம் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

மாவடிப்பள்ளி அனைத்து பாலர் பாடசாலை சம்மேளன ஏற்பாட்டில் மாவடிப்பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்க வளாகத்தில் நடைபெற்ற இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

தலைவர் அஸ்ரப்பின் அரசியல் உதயத்தின் பின்னரே முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ்ந்தனர். ஆனால் இப்போது அந்த நிலை மாறியுள்ளது. சமூகம் சரியான தலைவர்களின் பின்னால் செல்ல வேண்டும். அதற்காக கட்சி, பிரதேச வாதங்களைத் துறந்து எம்மை சிறப்பாக வழிநடத்தக்கூடிய சரியான தலைவர்களைத் தெரிவு செய்யுங்கள். பொருளாதாரமும், சுய கௌரவமும் ஒழுங்காக என்று கிடைக்கிறதோ அன்றே முழுமையான சுதந்திரம் கிடைத்ததாக அர்த்தம்.

இந்தக் காலத்திற்குப் பொருத் தமான வகையில் நாட்டின் கல்வி முறையில்



மாற்றம் தேவை என்று உரியவர்களை கிழக்கின் கேடயம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறோம். குழந்தைகளை பாடமாக்கும் கல்வி முறையிலிருந்து மாற்றியமைத்து சவால்களை எதிர்கொள்ளும் திராணியுள்ள தலைவர்களாக உருவாக்க அவர்களின் மீது கவனம் செலுத்துங்கள் என்றார்.

மாவடிப்பள்ளி அனைத்து பாலர் பாடசாலை சம்மேளன தலைவர் எம்.எச்.எம். அஸ்வர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவடிப்பள்ளி அனைத்து பாலர் பாடசாலை சம்மேளன தவிசாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், கிழக்கின் கேடயம் பொதுச்செயலாளருமான ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார். மேலும் விசேட அதிதிகளாக மாவடிப்பள்ளி ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர், பிரதேச முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியேகத்தர்கள், மனித அபிவிருத்தி ஸ்தாபன இணைப்பாளர், பாலர் பாடசாலை நிர்வாகிகள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# அம்பாறை மாவட்ட சுதந்திரதின விழா

(பாறுக் ஷிஹான்)

இலங்கையின் 76 ஆவது சுதந்திர



தின நிகழ்வுகள் நாடு பூராகவும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

76 ஆவது சுதந்திரதின விழா நிகழ்வு அம்பாறை நகரத்தில் அம்பாறை ஏரிக்கரைக்கு முன்பாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம தலைமையில் வெகுவிமரிசையாக இடம்பெற்றது.

76 ஆவது அம்பாறை மாவட்ட தேசிய சுதந்திர விழா அணிவகுப்புடன் ஆளுநரின் தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமானது. போர்வீரர்களை நினைவு கூர்ந்த பின்னர், மரியாதை அணிவகுப்பு மட்டுமன்றி, சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பர்கர் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கலாசார நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

இவ்விழாவின் இறுதியில் ஆளுநரின் முயற்சியின் கீழ் கலை நிலையங்கள், பாடசாலைகள், மாணவர் நாணல் குழுக்கள், இசைக்குழுக்கள், தேசிய கீதக் குழுக்களில் பங்குபற்றிய சிறார்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மேலதிக மாவட்ட செயலாளர் வி.ஜெகதீசன், மேலதிக மாவட்ட செயலாளர் நிலந்த டி சொய்சா, பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த ஸ்ரீபத்ம, தலைமையாசிரியர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள், பாதுகாப்பு பிரிவின் தலைவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் இதில் கலந்து கொண்டனர். (05)



# முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் சுதந்தின நிகழ்வு சிறப்புற நடந்தன





(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 76



ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் உமாமகேஸ்வரன் தலைமையில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தேசிய கொடி ஏற்றி நிகழ்வுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்ததுடன் மாவட்ட செயலகம் மற்றும் இராணுவத்தினர் இணைந்து ஏற்பாடு செய்த மரம் நடுகை நிகழ்விலும் இராஜாங்க அமைச்சர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# திருகோணமலை மாவட்ட செயலகத்தில் 76 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு





(ஹஸ்பர் ஏ.எச்)

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 76 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வு திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்றது.

தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப் பட்டதுடன் நாட்டுக்காகத் தம்மை அர்ப்பணித்த முப்படை வீரர்களை நினைவு கூரும் வகையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

'புதிய நாட்டைக் கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. மேலும் மாவட்ட செயலக வளாகத்தில் மர நடுகை நிகழ்வும் இதன்போது நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயல கஉதவிநிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத் தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# 76 ஆவது சுதந்திர தின விழா அக்கரைப்பற்றில்



(எம்.ஏ.றமீஸ்)

புதிய நாட்டை உருவாக்குவோம் எனும் தொனிப் பொருளின் கீழ் இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வு, அக்கரைப்பற்று மாநகர சபையின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் மிக கோலாகலமாக இடம்பெற்றது.

மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

தேசிய சுதந்திர தினத்திற்கு ஒத்ததாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வின்போது தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாடசாலை மாணவப் படையணிகள் பலவற்றின் அணி வகுப்பு மரியாதை இடம்பெற்றதுடன், அனைத்து இனத்தவர்களின் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

சர்வமதத் தலைவர்களின் விஷேட பிரார்த்தனை இடம்பெற்றதுடன், முன்னாள் அமைச்சரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாஉல்லாவின் விஷேட சுதந்திர தின உரையும் இதன்போது இடம்பெற்றது.

இந்நிகழ்வின்போது நீர்ப்பூங்கா சுற்றுவட்டாரத்தில் அனைத்து இன கலை, கலாசார, பாரம்பரிய நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பெருந்தொகையான பொதுமக்கள் இந்நிகழ்வின்போது கலந்து கொண்டமையும் குறிப்பிடத் தக்கது.(05)

## சாரதிகளின் நலன்கருதி ஓய்வெடுக்க தனி இடம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பணிமனையின் சாரதிகள் நீண்டகாலமாக எதிர்நோக்கி வந்த பிரச்சினைகள் தொடர்பில் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் அவர்கள் சாரதிகளின் நலன் கருதி தனியான இடவசதி ஒன்றை ஒழுங்குபடுத்தி வழங்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டிருந்தார்.

அதற்கிணங்க சாரதிகளுக்கான ஓய்வறை சாரதிகள் சங்கத்தால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.(05)

## சைவத் தமிழ் மன்றத்தின் பட்டமளிப்பு சிறப்புற்றது

(வி.ரி. சகாதேவராஜா)

சைவத் தமிழ் மன்றத்தின் அகில இலங்கை சைவ பண்டிதர் சபையானது 2023 ஆண்டில் நடத்திய சைவபண்டிதர், இளஞ்சைவ பண்டிதர் தேர்வுகளில் சித்தி







பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

சைவத்தமிழ் மன்றத்தின் தலைவர் சைவப்புலவர் சைவப்பண்டிதர் கிழக்கு பல்கலைக்கழக மருத்துவத்துறை பீடாதிபதி பேராசிரியர் தி.சதானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னிலை அதிதிகளாக கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மா.செல்வராஜா மற்றும் கிழக்குப் பல்கலைக் கழக கலை கலாசார பீட பீடாதிபதி கலாநிதி வ.குணபாலசிங்கம் ஆகியோரும் சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகமும் கலந்து சிறப்பித்தனர்.

இம்முறை ஒரு சைவப் பண்டிதரும், பதினெட்டு இளஞ்சைவ பண்டிதர்களும் பட்டங்களை பெற்றனர்.

மாணவர்களின் கண்கவர் நடனங்களும் இடம் பெற்றன.

சைவத் தமிழ் மன்ற பொது செயலாளர் சைவபண்டிதர், சைவப்புலவர் செ.சாந்தரூபன் உள்ளிட்ட நிருவாகிகளும் கலந்து கொண்டனர். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் சாய்ந்தமருதில் புதிய அலுவலகம் திறப்பு





(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் புதிய காரியாலய திறப்பு விழா நேற்று(ஞாயிற்றுக்கிழமை) வைத்தியசாலை தெற்கு வீதியில் உத்தியோபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருத்துக்கான ஜனாசா நலன்புரி காரியாலயம்தேவையாகஇருந்தபோதுசாய்ந்தமருது பிரதேச செயலாளர் மற்றும் ஜனாஸா நலன்புரி அமைப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க சாய்ந்தமருது வைத்தியசாலை தெற்கு வீதியில் அமைந்திருந்தசாய்ந்தமருதுபிரதேசசெயலகத்துக்குச் சொந்தமான கட்டடத் தொகுதியை மீள் பாவனைக்கு உட்படுத்தி முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் நினைவாக புனர்நிர்மானம் செய்து மக்களின் பாவனைக்காக உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது .

இந்நிகழ்வு ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான ஏ.எஸ். அஸ்வரின் நெறிப்படுத்தலில் ஆரம்பமானதுடன் சாய்ந்தமருதுபிரதேசசெயலாளர் எம்.எம் ஆசிக் , முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் மகன் எம். றிஸ்லி முஸ்தபா ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மேலும் சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான யூ.கே. காலித்தீன் நன்றியுரை நிகழ்த்தினார்.

இது தவிர சாய்ந்தமருது பிரதேசத்தில் ஜனாஸா நல்லடக்க சேவைகளை தன்னார்வத்துடன் முன்னெடுப்பதற்காக அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது. சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை எனும் பெயரிலான இந்த அமைப்பு கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வந்தது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மக்களின் நலன் கருதி சாய்ந்தமருது பிரதேசத்தில் இறந்தவர்களின் உடலை நல்லடக்கம் செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் வறிய குடும்பங்களின் நலன்கருதி இளைஞர்கள் சமூக ஆர்வலர்கள் எனப்பலரின்பங்களிப்புடன்இவ்வமைப்புஆரம்பித்து வைக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கதாகும்.சாய்ந்தமருது பிரதேசத்தில் ஜனாஸா நல்லடக்க விடயத்தில் மக்கள் எதிர்கொள்கின்ற அசௌகரியங்கள் மற்றும் கால தாமதங்களை நிவர்த்தி செய்வதற்காகவும் தேவையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் ஒழுங்கமைக்கப்பட்ட தன்னார்வ அமைப்பாக இயங்கி வருகின்றது.

இதன் மூலம் ஜனஸாவைக் குளிப்பாட்டல் கபனிடல் ஜனாசாக்களைக் கொண்டு செல்லல் நல்லடக்கம் செய்தல் போன்ற சேவைகள் இவ் அமைப்பின்மூலம்மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.(05)

# இடம்பெயர்ந்து இந்தியாவிற்கு சென்றவர்கள் முகாம்களைவிட்டு இங்கு மீள வரவேண்டும்

## குடிவரவு குடியகல்வு திணைக்கள பிரதி கட்டுப்பாட்டாளர் ஈ.எச்.நயனா பிரசங்க தெரிவிப்பு



இடம்பெயர்ந்து இந்தியாவிற்கு சென்று முகாம்களிலும், வெளியிலும் இருப்பவர்கள் இங்குமீளவரவேண்டும். அவர்களுக்கான பிரஜாவுரிமை வழங்கப்படும் என இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்கள பிரதி கட்டுப்பாட்டாளர் ஈ.எச்.நயனா பிரசங்கதெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்தொடர்ந்தும்ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

நிரந்தரமாக இந்த நாட்டு பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் வரப்பிரசாதங்களை அனுபவித்தல்என்பதுமிகவும்முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. பிரஜாவுரிமை பெறுவதற்கான சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் அமைச்சர் மற்றும் அமைச்சரின் செயலாளர் ஆகிய இருவரும் பத்திரத்தில் கையொப்பம் இடவேண்டும். அதற்கான பத்திரத்தில் கையொப்பம் வைத்த பின் சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக வந்து கொழும்பில் பெற வேண்டும். இதுதபாலில்அனுப்பப்பட மாட்டாது. ஆனால் உங்களுக்காக மீண்டும் பத்திரத்தை வவுனியாவில் வைத்து விரைவாக வழங்கத் தீர்மானித்துள்ளோம். உங்களது சிரமத்தையும், அதிக பணச் செலவு ஏற்படுவதைத் தடுக்கவும் இந்தத் திட்டத்தை நாம் செய்கின்றோம்.

குறித்த பிரஜாவுரிமை சான்றிதழ் வாழ் நாளில் ஒரு தடவை மாத்திரமே வழங்கப்படும். அதனை கவனமாக வைத்து பயன்படுத்துங்கள். மூலப் பிரதி எங்கும் கொடுக்காமல் அதன் பிரதிகளை வழங்கி உங்கள் செயற்பாடுகளை மகிழ்ச்சியாக நீங்கள் முன்னெடுக்க முடியும்.

நான் வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றேன். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவில் முகாம்களிலும், முகாம்களுக்கு வெளியிலும் இருப்பவர்கள் இங்கு வர வேண்டும். அவர்களும் இவ்வாறு பிரஜாவுரிமையைப் பெற முடியும். நாம் ஒரு நாட்டு மக்களாய், சகோதரமாய் இருக்க வேண்டும். நாட்டை விட்டு தற்போது எவ்வளவு பேர் வெளியேறினாலும் நாங்கள் உங்களை வரவேற்கின்றோம். ஒரு நாடு, ஒரு மக்களாய் இருந்து இந்த நாட்டை முன்னேற்றுவோம் எனத் தெரிவித்தார்.

(05-100)

# பாடசாலை அதிபருக்கு எதிராக மாகாண பணிப்பாளருக்கு மனு

(எச்.எம். சியாஜ் )

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் தற்போதைய தற்காலிக அதிபர் அன்சார் முஸ்தபா பாடசாலையின்அபிவிருத்தியைமையமாகக் கொண்டு செயற்படக் கூடிய பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றை உரிய காலத்தில் தெரிவு செய்யாமலும் அவைகள் வலுவிழந்த நிலையில் அதனை வலுப்பெற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் செயற்படுவதாகவும்பெற்றோர்கள்தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -


மேற்படி தேசிய பாடசாலையில் கடந்த இரண்டு வருடங்களாக பழைய மாணவர் சங்கம் தெரிவு செய்யப் படமால் உள்ளது எனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் உட்பட மூன்று உறுப்பினர்கள் இராஜினாமாசெய்தும்அந்தஇடைவெளி நிரப்பப்படாமல் உள்ளமை மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவுசெலவுஅறிக்கைஅனுமதிக்கான பொதுக் கூட்டம் கூட்டப்படாமை தொடர்பான முறைப்பாடுகளை உள்ளடக்கிய மகஜர் ஒன்று கற்பிட்டி அல் அக்ஸாதேசியபாடசாலையின்பழைய மாணவர்கள்மற்றும்பெற்றோர்களால் வடமேல்மாகாணகல்வித்திணைக்களத் தின்பணிப்பாளருக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.(05)

# கற்பிட்டியில் சுதந்திர தினம்

(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி முதலைப்பாளி தாருல் உலூம் காஷிபுல் ஹுதா அரபுக் கல்லூரியில் அதன் அதிபர் அஷ்ஷேஹ் ஏ.டப்யூ ஜெமில்கான் தலைமையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்76ஆவதுசுதந்திரதினகொண்டாட்டம் சிறப்புற நடந்தது. (05)





# குறிஞ்சிப்பிட்டியில் விபத்து; ஒருவர் சாவு







(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டிகுறிஞ்சிப்பிட்டி குருசடிசந்தியில் நேருக்கு நேர் இரு ஓட்டோக்கள் விபத்துக்குள்ளானதில் ஒருவர்பலிமற்றும்மூவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கற்பிட்டிஆதாரவைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு அனுப்பட்டுள்ளனர். விபத்து பற்றிய மேலதிக விசாரணைகளைகற்பிட்டி பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# புலிக்கொடியை தவிர்த்துவிட்டு தமிழர்கள் இன்று தேசியக் கொடியை ஏந்தியுள்ளனர்

## இதுவே உண்மையான சுதந்திர தினம் என்கிறார் சரத் வீரசேகர

வடக்கில் உள்ளவர்கள் புலிக்கொடியைத் தவிர்த்துவிட்டு நாட்டின் தேசியக் கொடியைத் தூக்கி இலங்கையின் சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றார்கள். இதுவே உண்மையான சுதந்திர தினம். இன்றுதான் யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைத்தநாளாகஇருக்கும்என்றுநாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கையின் சுதந்திர தினத்துக்கு ஆதரவான ஊர்வலத்தில் கலந்து கெண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் தேசியக் கொடிய ஏந்தியவாறு பொதுமக்கள் சுதந்திரத்தை கொண்டாடியதை வரவேற்கின்றேன். போர் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் இலங்கையின் சுதந்திர தினத்தை சந்தோஷமாக கொண்டாடிவருகின்றமை அனைவரும் அறிந்த விடயம்.

இந்த வருடம் யாழ்ப்பாண நகரில் இளைஞர்கள் தேசிய கொடியினை ஏந்தியவாறு இலங்கை 76ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடியமை வரவேற்கத்தக்க விடயம்.

இன்றுதான்யாழ்ப்பாணதமிழ்மக்களுக்கு சுதந்திரம் கிடைத்த நாளாக இருக்கும். பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு மக்கள் சுதந்திர தினத்தை கொண்டாடியதை நான் நேரில் பார்வையிட்டேன். அதுதான் உண்மையான நல்லிணக்கம். ஆனால், தமிழ் மக்களின் இந்த சுதந்திரமான நிலைமையினை குழப்புவதற்கு உயர் வர்க்கத்தினர் சூழ்ச்சி செய்து வருகின்றனர்' - என அவர் மேலும் கூறியுள்ளார்.

# சபாநாயகருக்கு மீது விரைவில் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## சுமந்திரன் தெரிவிப்பு

உயர்நீதிமன்றம் பரிந்துரைத்த விடயங்களில் ஒன்பது விடயங்கள் உள்ளீர்க்கப்படாது நிகழ்நிலை சட்டத்தினைசான்றுரைப்படுத்தியசபாநாயகர்மஹிந்த யாப்பாஅபேவர்த்தனவுக்குஎதிராகநம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலைச் சட்டம் சபாநாயகரால் சான்றுரைப்படுத்தப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் கருத்து வெளியிடும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைச் சட்டத்தின் உள்ளடக்கத்தினை ஆராய்ந்த பின்பே அதனை சான்றுரைப்படுத்துவார் என்று அறிவித்திருந்தார். அப்படிச் சான்றுரைப்படுத்துவதற்கு முன்னதாக எமக்கும் அதன் உள்ளடக்கத்தினை பகிருமாறு கோரியிருந்தோம். எனினும் அவர் அதனைப் பகிர்ந்திருக்கவில்லை.

இதேநேரம், வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள சட்டத்தையும் உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த விடயங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தபோது அதில் ஒன்பது விடயங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

சட்டமூலம் ஒன்று தொடர்பில் உயர் நீதிமன்றம் பரிந்துரைகளைச் செய்கின்றபோது அதனை உள்ளீர்த்தே நிறைவேற்றவேண்டும் என்பது அரசமைப்பின் உறுப்புரை 123(4)இல் குறிப்பிடப்பட்டுள்ளது. சபாநாயகர் ஒரு சட்டத்தைச் சான்றுரைப்படுத்திய பின்னர் அதனைச் சவாலுக்கு உட்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன. எனினும் நாம் அந்த விடயத்தினை சட்ட ரீதியாகக் கையாள்வது தொடர்பில் ஆராய்கின்றோம்.

சபாநாயகர் நிகழ்நிலைச் சட்டத்திற்கு சன்றுரை வழங்கிய செயற்பாட்டுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதற்கு உள்ளோம்.

இது தொடர்பிலான பேச்சுக்களை நாம் எதிரணிக்குள் பேச்சு நடத்தி வருகின்றோம். இந்தப் பிரேரணை ஊடாகச் சபாநாயகரின் செயற்பாட்டை அம்பலப்படுத்துவோம் - என்றார்.

நிகழ்நிலைச் சட்டமூலம் மீதான விவாதம் ஜனவரி 23, 24 நடைபெற்று திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. எனினும், குறித்த சட்டமூலத்தில் உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களில் 13 உள்ளடக்கப்படவில்லை என்று சுமந்திரன் சபையிலும், சபைக்கு வெளியிலும் குறிப்பிட்டிருந்தார். சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஏனையவை பற்றி ஆராய்வதற்கு நாடாளுமன்றத்திற்குக் கால அவகாசத்தினை வழங்காது அவசர அவசரமாக சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் குற்றங்சாட்டியிருந்தார்.

அதனையடுத்து, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள்மற்றும்நாடாளுமன்றஉறுப்பினர்கள்குழு ஆகிய தரப்பினர் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகள் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் ஆராய்வார்கள் என்றும் அறிவித்தார். எனினும், கடந்த முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் சபாநாயகர் நிகழ்நிலை காப்புச் சட்டத்தைச் சான்றுரைப்படுத்தினார்.

# தமிழர் தேச கரிநாளில் முல்லைத்தீவில் 7 விடயங்களை முன்வைத்து ஆர்ப்பாட்டம்

## த.தே.ம.முன்னணி ஏற்பாடு



(சண்முகம் தவசீலன்)

இலங்கையின் சுதந்திரநாள் தமிழர் தேசத்தின் கரிநாள். ஏழு முக்கிய விடயங்களை முன்வைத்து த.தே.ம.முன்னணி முல்லையில் ஆர்ப்பாட்டம்



இலங்கையின் சுதந்திரநாள் தமிழர்தேசத்தின் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் ஏழு முக்கிய விடயங்களை முன்வைத்து இன்று(ஞாயிற்றுக்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துஜனின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி வேண்டும், தமிழ் இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை தேவை, தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுதல் வேண்டும், பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும், தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும், தமிழர் தாயகத்திலுள்ள வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளை அழிக்காதே, இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டித் தீர்வு வேண்டும் உள்ளிட்ட ஏழு விடயங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டதுடன், நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரிலான மைத்திரி - ரணில் அரசாங்கம், தமிழ் தரப்புடன் இணைந்து தயாரித்த புதிய ஏக்கியராஜ்ஜிய (ஒற்றையாட்சி) அரசமைப்புவரைவைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி முற்றாக நிராகரிப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கானநீதி, தமிழ் இன அழிப்பிற்கான நீதி, நில ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்படுதல் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# யு.எஸ்.எவ். ஸ்ரீ லங்கா அமைப்பின் சுதந்திரதின நிகழ்வு சாய்ந்தமருதில்



(பாறுக் ஷிஹான்)

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு யு.எஸ்.எவ் ஸ்ரீ லங்கா அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது கமுஃ லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலயத்தில் மரம் நடுகை நிகழ்வும் மற்றும் சிரமதான நிகழ்வுகள் ஷஇடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக



ரிஸ்லி முஸ்தபா கல்வி உதவி அமைப்பின்தலைவர்ரிஸ்லிமுஸ்தபா கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் யு.எஸ்.எவ். ஸ்ரீ லங்கா அமைப்பின் ஸ்தாபகத் தலைவரும் இளைஞர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான அ.கபூர் அன்வர், பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், யு.எஸ்.எவ். ஸ்ரீ லங்கா அமைப்பின்







உறுப்பினர்களும் என பலரும் கலந்து கொண்டனர்.(05)

# சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் சுதந்திர தினத்தில் சிரமதானப் பணி





(பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பிரதேச செயலக சிரமதானம் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பணிப் புரைக்கு அமைவாக நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட், நிர்வாக கிராம உத்தியோகஸ்தர் எம்.எஸ்.எம். நளிர் ஆகியோரின் ஒழுங்குபடுத்தலிலும், கல்முனை மாநகர சபையின் மேற்பார்வையாளர் யூ.கே. காலித் தீனின் மேற்பார்வையிலும் இடம் பெற்றது.

இதில் பிரதேச செயலகத்தின் கிராம சேவை உத்தியோகஸ்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள்,



செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் ஆகியோருடன் கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் ஊழியர்களும் சமுர்த்தி பயணாளிகளும் கலந்து கொண்டு சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.02.2024இல் வெளியிடப்பெற்றது.